ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

प्रमादाद्वै असुराः पराभवन् अप्रमादाद्ब्रह्मभूता भवन्ति ।
नैव मृत्यु र्व्याघ्र इवात्ति जन्तून् नह्यस्य रूपमुपलभ्यते हि ॥

ஓ! திருதராஷ்டிர மஹாராஜனே!! (விரோசனன் முதலிய) அஸுரர்கள் அனைவரும் (ஆத்மஸ்வரூபத்திலிருந்து) தவறினபடியால்தான் அவமானமடைந்தார்கள். (இந்திரன் முதலிய தேவர்கள்) ஆத்மஸ்வரூபத்திலிருந்து தவறாமையால் பிரும்மாகாரமாக விளங்கினார்கள். (ஆகையால் ஆதம்நிஷ்டை தவிர்தலே மிருத்தியுவாகும்) மிருத்தியுவானது புலிபோல் பிராணிகளைப் பக்ஷிககிறதில்லை. ஏனென்றால் (புலியைப்போல்) மிருத்தியுவுக்கு ரூபம் காணப்படவில்லையல்லவா?

அந்தர்முகமாய் அறியவேண்டிய ஆத்மஸ்வரூபத்தை அறிந்துகொள்ளாமல பாஹ்ய விஷயங்களில் ஆசைகொண்ட ஜீவர்கள்தான் அஸுரர்கள் ஆவர். "அனந்தபூர்ண பிர்ம்மமே நான்" என்று ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்தவர்கள்தான் தேவர்களென்பது. சுருதி ஸ்மிருதி நியாயங்களால் "அஸத்தென்று" நிஷேதிக்கப்பட்ட தேகாதி திருச்யங்களில் ஆத்ம புத்தியைச் செய்பவன் நிஷித்தகர்மம் செய்யும் பாபியைப்போல் துக்கத்தின் மேல் துக்கத்தையடைந்து பவபந்தத்துக்குள்ளாவான். தேகாத்ம புத்தியோடு பாஹ்ய விஷயங்களில் ஆசைகொண்டு அதற்குரிய வேலைகளைச் செய்துகொண்டிருப்பவனுக்கு அஹங்காராதி திருச்யநாசம் ஒருபோதும் ஸாத்தியமாகாதாதலின் விவேகத்தால் அநாத்ம பாஹ்ய வஸ்துக்களை விலக்கி, ஸத்தியபிரத்யகாத்மாவை நிச்சயித்துக்கொண்டு "அவ்வாத்மாவே அகண்ட பிரும்மஸ்வரூபம்" என்ற அனுபவத்தால்த்தான் திருச்யத்தை அகற்றக்கூடும்.

இவ்வாறு திருச்ய நாசம் ஸ்வரூபானுபவத்தால் ஏற்பட்டுவிட்டாலும் அனாதிவாஸனையால் மீண்டும் திருச்யதோற்றம் விடாது. அதுவும் பந்தஹேதுவாதலின் அவ் வாஸனாக்ஷயத்தின்பொருட்டு ஸர்வகாலமும் ஸமாதிநிஷ்டனாய் காலங்கழித்துவரவேண்டும். பிரமாதத்தினால் ஸ்வஸ்வரூபத்திலிருந்து ஞானியின் மனம் நழுவும்பட்சத்தில் கையினின்றும் நழுவிய பந்தைப்போல் பாஹ்ய விஷயங்களில்ச் சென்றுவிடும். அதன்பின் அதன் ஸங்கல்ப்பமும், அதனால் காமமும், அதனால் விஷயப் பிரவிருத்தியும், அதனால் அதோகதியும் நேர்ந்துவிடும். ஆதலால் பிரும்மாத்ம நிஷ்டையில் பிரமாதத்தையன்றி ஞானிகளுக்கு வேறு மிருத்தியுவில்லை. ஆகவே விவேகிகள் ஸர்வனர்த்தஹேதுவான பிரமாதத்தை அகற்றி ஸதா ஆத்ம நிஷ்டையை அடைய வழி தேடவேண்டும் என்பது கண்டுபாவம். சுபம்.

V. J. S.

ஆர்யதர்மம்.

ஆங்கிரஸ-ஞு ஆவணி-மீ ௰௨

ஸமயங்களை ஒழிக்கவேண்டுமாம்.

திருச்சி ஜில்லாவைச்சேர்ந்த துறையூர் கிராமத்தில் தமிழர் மகாநாடு ஒன்று சமீபத்தில் நடைபெறப்போவதாயும், அதில் சுய மரியாதை சங்கத்தைச் சேர்ந்த பல பிரமுகர்கள் கலந்துகொண்டு "ஹிந்திப்பிரசாரஞ்செய்தல், ஜாதி வித்தியாஸங்களை ஒழித்தல், ஜாதிக்குறிய பட்டப்பெயர்களை எடுத்தல்,சமயங்களையொழித்தல், சமய அடையாளங்களை விடுத்தல், விக்கிரஹாராதனை, தேவாலய நிர்மாணம், கும்பாபிஷேகம், பூஜை, உத்ஸவம் முதலியவற்றை அழித்தல்,தேவாரம்,திருவாசகம், வேதசாஸ்திரம் முதலிய வைதிகக் கிரந்தங்களை விலக்கல், விவாஹம், சிராத்தம், கருமாதி முதலியவற்றை நீக்கிவிடல்" முதலிய விஷயங்களை நிறைவேறும்படி செய்யப்போவதாகப் பல தமிழ்ப் பத்திரிகைகளிலிருந்து வெளிப்படுகின்றது.

நமது ஜாதி ஸமயாசாரமுறைகளெல்லாம் இச் சங்கத்தாரின் முயற்சிசிறிதுமின்றியேமேற்றிசையாரின்பழக்கவழக்கங்களாலும் ரயில், மோட்டார், காபிஹோட்டல் முதலியவைகளாலும் நாளுக்குநாள் அழிந்துகொண்டே வருங்காலத்தில் இதன்பொருட்டு பொதுக் கூட்டமும், அதில் மேற்கண்டவிஷயங்களைக் கொண்டுவந்து விவாதித்துத் தீர்மானம் செய்யவேண்டுமென்பதும் அநாவச்யம் என்பது விவேகிகளுக்கு நன்கு விளங்கும்.

அநாதி நித்தியமாய்ப்பிரகாசிக்கும் ஹிந்துமதத்தை நேற்றுப் பிறந்து நாளை மரிக்குந்தன்மைவாய்ந்த இச் சங்கத்தாரால் அடியோடு அழித்திவிடத்தான்முடியுமா? பிந்ந ருசியுள்ள பல வகை அதிகாரிகளின் மனோபாவத்தை அனுஸரித்து ஏற்பட்ட நமது ஸமயாசார ஸம்பிரதாயங்களையெல்லாம் இச் சங்கத்தார்நினைப்பது போல் முன்னோர்களின் கட்டுப்பாடென்பதாகவே வைத்துக்

கொண்டபோதிலும் நாம் நாகரீகமற்ற பிறநாட்டாருடன் கலந்து கெட்டுப்போகாவண்ணம் நம்மைப் பாதுகாப்பதற்காக அவை அவச்யமென்பதை இச் சங்கத்தார் மறுக்க முன்வருவரோ?

என்றையதினம் அப்படிப்பட்ட பாதுகாப்பு நமக்கு அவச்ய மில்லாமற்போகுமோ? அப்போது நமது ஸமய ஸம்பிரதாயங்கள் தானாகவே அழிந்துவிடும். அவை நமக்கு அவச்யமாய் வேண் டிய காலங்களில் தங்களைப்போல் மற்றுமுள்ள எத்தனை ஸமாஜத் தார் எவ்வளவு பிரஸங்கித்தாலும், கண்டித்தாலும், தங்கள் உபன் யாஸப்படி நடவாதவர்களை கத்தியால் வெட்டிவிட்டாலும், என்ன செய்தாலும் அழிந்துபோகமாட்டாது. இருந்தேதீரும்.

இவ் விவேகிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு நாமும் நமது ஆசாரானுஷ்டான முறைகளை மாற்றிக்கொள்வதற்காக முயற்சிப்போமாயின் அதைக்காட்டிலும்மூடத்தனம் வேறொன்று மில்லை என்பதை எடுத்துக்காட்டாமலிருக்கமுடியவில்லை.

நமது மதங்களும், ஸம்பிரதாயங்களும், சுயநலங்கருதிய முன் னோர்களால் பணம் சம்பாதிப்பதின்பொருட்டு கண்டுபிடிக்கப்பட் டவை என்று வாய்கொண்டமட்டும் வைத்துவருமிவர்கள் தமது சீர்திருத்தோபதேசமார்க்கங்களால் புதிய மத வியவஸ்தை ஏதா வதொன்றை ஸ்திரமாய் ஏற்படுத்துவார்களா? இருப்பதை அடி யோடு அழிப்பதற்கு எல்லோராலும் முடியும். இருப்பதையழிக் காமல் அதிலுள்ள அசுத்தங்களை விலக்க வழிகாட்டுவது ஒருவரா லும் முடியாது. நமக்கு ஸ்வாபாவிகமாயமைந்துள்ள மதங்களை யெல்லாம் அழித்துவிட்டு எவ்விதநிலையில் வாழவேண்டும் என்று இச் சங்கத்தாரின் அபிப்பிராயமோ? எத்தனையோ ஆயிரவருஷ காலமாகப் பரம்பரை நியாயமாய் நம்முடைய முன்னோர்கள் வைத்துவிட்டுப்போன நமது ஆசாரங்களையெல்லாம் ஒழித்து விட்டு அயல் நாட்டுஜன ஸமூஹத்தின் ஆசாரானுஷ்டானமுறை களைப் பின்பற்றி உண்பதும், உறங்குவதும், மக்கள் பெறுவதுமா கிய மிருக தர்மங்களோடு கண்டதே காக்ஷி கொண்டதேகோலம் என்றபடி மனம் போனபடியெல்லாம் சஞ்சரித்துக்கொண்டு, பொழுதுபோகாவிட்டால் வைதிகர்கள் தெய்வம், மதம், தாய், தந்தை, குருபீடம், இவையெல்லாம் வாய்கூசாமல் வசைமொழி

களால் வைத்துகொண்டும் நமக்குக் கிடைத்த சொற்ப ஆயுள் காலத்தையும் வீணாக்கி வெறும் நாஸ்திகபிண்டமாய் வாழ்வது வெகு அழகோ?

சுயமரியாதைவேண்டுமெனக் கருதுமிச் சங்கத்தார் தனது நன்மைக்காகப் பிறரை தூஷித்தார்களேயானல் ஒரு நன்மையும் ஸித்திக்கமுடியாது. தனது நன்மைக்காகப் பிறரை த்தூஷணை புரிவது ஒருபோதும் தக்கவழியாகமாட்டாது. இவ் உலகில் எந்தஜாதியினிடத்தில்தான் குற்றங்களில்லை. இப்படி ஒரு ஜாதியாரை மற்றொரு ஜாதியார் வையத்தொடங்கவே, நமது வம்சத்துக்கும் நம் நாட்டிற்கும் லஜ்ஜாகரமாயுள்ள தூஷணக் கிரந்தங்கள் விருத்தியாவதுதானு சீர்திருத்தம் என்பது.

நமது தேசத்தில் சீர்திருத்தக்காரர்களுக்கு எப்போதாவது பஞ்சமேற்பட்டதுண்டா? அவர்களால் விளைந்த பிரயோஜனம் என்ன? இதுவரையிலும ஏற்பட்ட சங்கங்களும், பத்திரிகைகளும், பிரஸங்கங்களும் நமக்குப் போதாதா? இதுவும் வேண்டுமா? இனி ஏற்படப்போகும் மாறுதல்களையெல்லாம் நம் முன்னோர்கள் தம் தபஸ் சக்தியால் முன்னதாகவே எதிர்பார்த்து அந்தந்த காலதேசங்களுக்குத் தக்கவாறு நாம் நமது மதத்தை நடத்திக்கொள்ளும்விதத்தைச் சிறிதும் விடாமல் ஏற்படுத்தியிருக்குங்கால் அதைக் கவனியாமல் இவர்களால் உண்டாக்கிய புதிய சீர்திருத்தம் ஒருவிதத்திலும் ஒப்புக்கொள்ளதக்கதல்ல.

அன்றியும்,பிராம்மணவகுப்பினரிடம், உள்ள கோபாவேசத்தால், தம் வகுப்பினராலும், நீண்டகாலமாக கையாளப்பட்டு வந்த தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களையும், விபூதி ருத்திராக்ஷம் முதலிய மத அடையாளங்களையும், முதலியார், செட்டியார் என்பதாதி பட்டப்பெயர்களையும், கண்ணப்பர் முதலிய பக்தியிற்சிறந்த ஞானிகளையும், இழிவுபடுத்திக் கூறுவது எவ்வளவு மதிஹீனம். பாருங்கள்! கல்ங்கா நெஞ்சம்வாய்ந்த இவர்களின் மனம் காலனைக்கண்டாலுங் கலங்காதே? இப்பிரபஞ்ச வாழ்க்கையும், சரீரமும், இம்மாதிரியாகவே எப்போதுமிருக்குமென்று எந்த யுக்தியால் இவர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள். இவர்களின் வாழ்வு எதுவரையில் என்பதை இவர்களே கொஞ்சம் ஏகாந்தத்தில் ஆலோசிப்பார்களானுல்,மதத்தின் வாழ்வைப்பற்றிய

விவாதங்கள் செய்யத் தலைப்படமாட்டார்களென்பது நிச்சயம். இவ்வுலகவாழ்க்கை நித்தியமாயுள்ளதென்ற இவர்களின் கனவை எந்த இந்தியன்தான் ஸரியென்று அங்கீகரிப்பான். ஒன்றையும் முற்றிலும் விசாரித்து தீர்மானித்துக்கொள்ளாமல், சிறு குழந்தைகளைப்போல், தம்மிஷ்டப்படி வாதாடிக்காலங்கழிப்பதில் பயன் என்னவிருக்கிறது. இவ்வுலகவாழ்வு அனித்தியம். நம்மைத் துன்புறுத்தும் பிறப்பென்ற நோயைப் போக்கடித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை இச்சங்கத்தார் நம்புவார்களானால், ஈசுவரன், மகரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வாராதிகள், மதாசாரியர்கள், முதலிய முன்னோர்களின் வழியைப்பின்பற்றி, க்ஷேமம்பெருவதுதான் அவச்யம் என்றும், வேத வேதாந்த தூஷணை, தெய்வ நிந்தை, துவேஷ புத்தி, பொறாமை, பொய் முதலிய தமது துர்குண ஸமூஹங்களையெல்லாம் விலக்கவேண்டியதென்றும், ஹிந்துமதத்தை அழிக்கமுடியாதென்றும், பகவான் ஒருவர் உளர். அவரருள் அடையஸன்மார்க்கம், பக்தி, நற்குணம், முதலியவை காரணமாகுமென்றும், இவர்கள் நன்றாய் உணர்ந்து கொள்வார்கள்.

ஆகவே தற்காலத்தில் மதச்சண்டையைக் கிளப்பிவிடுவது உசிதமில்லை. எவ்வளவுதூரமிவர்கள் ஸமயாசாரங்களை தூஷித்த போதிலும் அத்தனையும் கேட்டுக்கொண்டு நாங்கள் பொருத்துக் கொண்டிருப்போமேயன்றி பிரதி தூஷணங்களை ஒருபோதும் சொல்லமாட்டோம்.

ஆனால் அவர்களையும் ஸன்மார்க்கத்தில் திருப்புவதற்கான உபாயங்களைமட்டிலுமவலம்பிப்போம். ஐயோ! பாவம்!! ஏன் இவ்விதம் இவர்கள் தன்னுடைய புனிதமான ஜென்மாவை வீணாக்கிக்கொள்ளவேண்டும் என்ற அனுதாபமேலீட்டால் எங்களால் உபதேசிக்கப்பட்ட உத்தம மார்க்கத்தை மூடப் பிடிவாதத்தால் இவர்கள் அவமதித்துவிடுவார்களேயானால், மேன்மேலும் அனேக அனர்த்தங்கள் நம்மைவிட்டகலாதிருக்க நேரிடுமென்பதை இவர்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

ஜாதிக் கட்டுப்பாடு.

“இதையுடைத்துவிடவேண்டும்” என்று இச் சங்கத்தாரின் நினைவு கனவுமாத்திரமே. ஜாதியென்பது சுயமாகவே ஏற்பட்

டுள்ளது. அதை உடைத்துவிட முயற்சிப்பது வீணே? செல்வத் தாலோ, தொழிலாலோ, குணத்தாலோ, மற்றெவ்விதத்தாலோ வகுப்புபேதமில்லாத நாட்டையெங்கேயாவது கண்டதுண்டா? அங்கங்கே உட்புகுந்துபார்த்தால் எங்குமிப்பேதமில்லாமற்போக வில்லை. முரட்டுப் பிடிவாதத்தால் இந்த ஜாதிபேதத்தை ஒழிக்க ஒருபோதும் முடியாது. அவ்விதமொழிப்பதாயிருந்தால் நம்ம வரின் ஸ்வரூபமே அழிந்து மரணத்தையடையும். ஜாதியென்பது வஸ்துஸ்வரூபமன்றோ? பகவானுடைய அருளால் இதையழித்து விடுவது ஸுலபமே. அதுதான் எங்களால் ஒப்புக்கொள்ளப் பட்ட முக்தி நிலையென்பது. அந்த நிலையிலுங்கூட இந்த ஜாதி பேதத்தை ஒருவன் அழித்துவிடுவதாக ஒப்புவதில்லை. அந்த தசையில் தானுகவே இப் பேதமெல்லாம் அழிந்துபோகும். ஆத லால் ஈச்வரனுலுங்கூட இவ் வுலகிலுள்ள ஜாதிபேதங்களை அழிப் பதற்கு முடியாது. அப்படியே ஜாதி மாறுதல் விஷயமும் அஸங் கதந்தான். ஒரே ஜன்மத்தில் மிருகங்களை மனிதராகவும், விரு க்ஷங்களை மிருகங்களாகவும் மாற்றிவிட முடியுமா? மிருகத் தன் மைக்குரிய குணங்களின் மாறுபாட்டால் ஜாதியும் மாறுகிறது. அப்படியானுல் மிருக குணமுள்ள மனிதரையெல்லாம் மிருகங்க ளென்றே அழைப்பது உசிதமென்றேற்பட்டுவிடும். ஆதலால் ஜாதி வித்தியாஸங்களை ஒழிப்பதற்காகவும், மாற்றுவதற்காகவும் இச் சங்கத்தார் எத்தனிப்பது அனுவச்யம்.

ஸமயக் குறிகள்.

நமதுமதம் இன்னதென்று நெத்தியைக்கொண்டே யாவரும் அறிந்துகொள்ளும்பொருட்டு இவ்வடையாளங்களையெல்லாம் நம் முன்னோர்கள் கண்டுபிடித்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவற்றை குலாசாரப்பிரகாரமாகத் தரித்துக்கொள்பவர்களுக்கு மூளை வலு வாயும், கூர்மையாயுமிருக்குமென்று நமது சாஸ்திரங்களும் கதறு கின்றன. இவையெல்லாம் அவச்யமில்லை என்று நிராகரிப்பதில் என்ன ஸாதகமென்பதை இந் நாஸ்திகரிடம் வினவுவதும் நமக்கு அவச்யமில்லை.

பட்டப் பெயர்கள்.

அந்தந்த ஜாதிக்குரிய பட்டப் பெயர்களை எடுத்துவிட்டு மொட்டைப் பெயரை ஏற்படுத்திக்கொண்டு மொட்டைத்தலையா

யிருக்க விருப்பங்கொண்டவர்களுக்கு ரத்தின சபாபதி, பொன்னம்பலம், பார்த்தஸாரதி, ராமய்யா, சுப்பிரமணியம், அன்ன பூர்ணி, திருஞான ஸம்பந்தம் என தெய்வத்தின் பெயரைத் தம் பெயராக ஏற்படுத்திக்கொள்வது எப்படி உசிதமாகுமென்பதை வினவ, என்ன உத்தரம் இவர்களிடமிருந்து கிளம்பும். ஒன்றும் வேண்டாமென மறுக்கும் இவர்களுக்கு "உட்" "ஸ்டோன்" என்பதாதி மேனாட்டுப் பெயர்களும் கீழ்நாட்டிலுள்ள மிருகம், விருக்ஷம், முதலியவற்றின் பெயர்களுமல்லவா பொருந்தும்.

தேவாலயம்.

மொஹலாயச் சக்கிரவர்த்திகளின் அரசாட்சியில் பலதடவை நம் தேசத்து தேவாலயங்களெல்லாம் இடித்துத் தரையோடு தரையாய் நிரவப்பட்டபோதிலும் மறுபடியும் உடனே அவை எழுப்பப்பட்டனவென்பது தேச சரித்திரமூலமாயும் பிரத்தியக்ஷமாயும் விளங்கவில்லையா? இவர்களும் அம் மிலேச்சர்களின் வழியைப் பின்பற்றுவார்களேயானால் என்ன பிரயோஜனம் ஏற்படும்.

ஆதலால் பிரிய வாசகர்களே! இவர்களுடைய மாயவலையில் சிக்கிகொள்ளாமல் நம் முன்னோர்கள் நமக்கு வைத்துவிட்டுப் போன மதமென்றும் குல தனத்தை இரக்ஷிப்பதன்பொருட்டு நற்புத்தி ஏற்படுமாறு பகவானைப் பிரார்த்திப்போமாக,

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

புக்கைக்ஷேத்திரம்

ஸ்ரீ விசுவநாத பிரயாக மாதவ தேவாலய

மஹா கும்பாபிஷேக மஹோத்ஸவப் பத்திரிகை.

ஸ்ரீ காஞ்சீமண்டலத்தில் கார்வேடிநகாம் ஸமஸ்தான ப்ரதேசத்தில் ஸ்ரீ குசஸ்தலீபஞ்சகங்கா ஸங்கமதீரத்தில் விளங்கும் ஸ்ரீ கௌதமமுனிவர் அருந்தவமியற்றிய புண்யஸ்தலமாகி இப்போது "புக்கை" என்று வழங்கப்படும் கௌதமாசிரமமென்னும் தக்ஷிண காசிக்ஷேத்திரத்தில் ஸகலஜனங்களுக்கும் கோரியவரங்களை அளித்துக்கொண்டு திவ்விய ஸாந்நித்யம் பெற்றுவிளங்கும்

ஸ்ரீ விசாலாக்ஷீ அன்னபூர்ண ஸமேத ஸ்ரீ காசீவிசுவநாதஸ்வாமி ஸ்ரீ பூமிநீளாஸமேத ஸ்ரீ பிரயாக மாதவஸ்வாமி காலபைரவ துர்க்காதி தேவமூர்த்தியின் ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்விக்கப்பட்டு ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காராசாரியஸ்வாமிகள் அவர்களின் பூர்ணாநுக்கிரஹம்பெற்று நாளது ஆங்கிரஸஸ்ரூ ஆவணிமீ 27உ (11-9-32) பாநுவாரம் துவாதசி உத்திராடநக்ஷத்திரம் சோபனநாமயோகம் பவகரணம் கூடிய சுபதினத்தில் உதயாதி முக்கால் நாழிகைக்குள் ஸிம்மலக்கினத்தில் ஸ்ரீ விசுவநாத ஸ்ரீ பிரயாகமாதவ தேவாலய மஹா கும்பாபிஷேக மஹோத்ஸவத்தை ஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகள் அவர்களும் கூடயிருந்து நடத்த நிச்சயித்திருப்பதால், ஆஸ்திகமஹாஜனங்கள் அனைவரும் ஷை மஹோத்ஸவத்திற்கு அவசியம் வந்திருந்து ஷை பஞ்சகங்கா ஸங்கம புண்ணியதீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ விசுவநாத பிரயாகமாதவாதி மூர்த்திகளை தர்சித்து பரமனருளால் இஷ்டஸித்திகளைப் பெறவேண்டுமாய்க் கோரப்படுகின்றது.

காரிய நிகழ்ச்சிமுறை.

ஸ்ரீ ஆங்கிரஸஸ்ரூ ஆவணிமீ 23உ புதவாரம் (7—9—32)	விநாயக பூஜை கலசஸ்தாபனம்
ஆவணிமீ 24,25,26,தேதிகளில் (8-9-10-9-1932)	அனுஞ்ஞா வாஸ்துசாந்தி அங்குரார்ப்பணம் யாகசாலை
ஆவணிமீ 27உ (11-9-32) ஞாயிற்றுக்கிழமை சுத்ததுவாதசி உத்திராட நக்ஷத்திரம் காலை சூரியோதயாதி $\frac{3}{4}$ நாழிகைக்குள் ஸிம்மலக்கினத்தில்.	கும்பாபிஷேக மகோத்ஸவம்.

இவ்வாறு ஸ்ரீ புக்கதேவாலய ஜீர்ணோத்தாரண ஸங்கத்தின் சார்பாக விஞ்ஞாபனம்செய்யும் அன்பர்கள்.

குண்டாரெட்டி, ரங்கய்யரெட்டி, தாமரபாக்கம். பா. மாணிக்கம் நாயுடு. பா. மேகவர்ணம் நாயுடு. ஆனம். குப்புசாமி நாயுடு. எ. முருகேச முதலியார். நகரி. து. ராமகிருஷ்ணரெட்டி. து. அப்பாயிரெட்டி. தேசூர் அகரம்.

கங்கணூல. அப்பாநாயுடு. கங்கணூல செங்கமநாயுடு. அயனம் பாக்கம். காலி. குரவப்ப நாயுடு. சிந்தலசெத்தம். தொம்மாராஜு. புல்லமாராஜு. சூரிகாபுரம். பைடப. வரதாராஜுலுரெட்டி. பன்னூர் டி, முனிரத்தினம் நாயுடு, பிரஸிடெண்டு தாலுகா போர்ட்டு திருத்தணி.

யன். சுப்பிரமண்ய சர்மா.
இ. திரிபுராந்தக முதலியார். } காரியதரிசிகள்.

N. B:— இந்த திவ்வியக்ஷேத்திரமானது சித்தூர் ஜில்லா, அரக்கோணம் ரேணிகுண்டா ஜங்ஷன்களுக்கு இடையில் நகரி ரயில்வேஸ்டேஷனுக்கு 5மைல் தூரத்திலுள்ளது. நல்ல சிவில்பாதையுண்டு. ஸ்டேனுக்கருகில் விசேஷமாய் குதிரைவண்டிகள் உண்டு.

புக்கை க்ஷேத்திரத்தில்
ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய மடஸ்தாபன
பத்திரிகை.

பறிதலை யருகாதிப் பன்மதக் களைகட் டங்கா
ளறுமதப் பயிர்க ளீனு மறிவது தழையும் வண்ணங்
கறைமிடற் றண்ணல் தானே கலியினிற் சங்கரப்பே
ருள வவ தரித்தானன்னோ னுயர்கழல் சென்னி சேர்ப்பாம்.

ஆஸ்திகோத்தமர்களே!

ஸ்ரீ காஞ்சீ மண்டலத்தில் கார்வேடிநகரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த நகரிக்குச்சமீபம் ஸ்ரீ குசஸ்தலி நதீ பஞ்சகங்கா சங்கம தீரத்தில் விளங்கும் ஸ்ரீ கௌதமமுனிவர் அருந்தவ மியற்றிய புண்ணிய க்ஷேத்திரமாயும் தற்போது "புக்கை" என்று வழங்குவதாயுமான தக்ஷிண காசியில் ஸகலர்களும் கோரிய வரங்களை யருளிக்கொண்டு திவ்விய ஸாந்நித்யம் பெற்று விளங்கும் ஸ்ரீவிசாலாக்ஷீ அன்னபூர்ணா ஸமேத ஸ்ரீ காசீ விஸ்வேஸ்வரஸ்வாமி, ஸ்ரீ காலபைரவர், ஸ்ரீ பிரயாகை மாதவ ஸ்வாமி ஆலயங்களுக்கு அருகே ஸ்ரீ ஜகத்குரு சங்கர பரமாசாரியாள் மடம் ஒன்று புதிதாய்

ஸ்தாபிக்க பரமேச்வரனருளை முன்னிட்டு துவக்கப்பட்டிருக்கிறது. ஷெ மடம் கட்டடவேலை முடிந்ததும் ஸ்ரீ பரமாசார்யாள் பிம்பத்தைப் பிரதிஷ்டை செய்து வைதிக பூஜை நித்தியமாய் நடத்தி வரவும் உத்தேசித்திருக்கிறது. இவ்வுத்தேசங்கள் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி யவர்களின் பூர்ணானுக்கிரகத்தை முன்னிட்டே தோன்றியுள்ளன வாகையால் கூடிய சீக்கிரமே பூர்த்தியாகு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆதலால் ஆஸ்திக சிகாமணிகள் அனைவரும் இப்பெருங்காரியத்தை தங்கள் தங்களாலியன்ற அளவு உதவிபுரிந்து முடித்துவைக்கக் கோருகிறோம். இங்ஙனம்,

புக்க சங்கரமடஸ்தாபன நிர்வாஹசபை அங்கத்தினர்

B. கிருஷ்ணசாமி ஐய்யர், நகைவியாபாரி

A. குப்புசாமி நாயுடு தலைவர் [சென்னை

ஸ்ரீபுக்கநகரிபோஸ்ட்
சித்தூர் ஜில்லா
8 . 8—32

ஜி. ரங்கய்ய செட்டி உபதலைவர்
N. சுப்பிரமணிய சர்மா காரியதரிசி
E. திருபுராந்தக முதலியார்

ஓர் வேண்டுகோள்.

அறத்தில் ஊக்கமிகு அன்பர்காள்!

இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் மனவேற்றுமையானது பல்வகை வழிகளில் உளஎன்றாலும் ஒவ்வொருவரும் சுகத்தை விரும்புவதும் அதை அடைய முயற்சிப்பதும் துக்கத்தை வெறுப்பதும் அதைத் தவிர்க்க வழிதேடுவதும் சுகத்துக்கு இன்றியமையாத புருஷார்த்தங்களான தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், (அறம் பொருள், இன்பம், வீடு) என்பனவற்றை அடைய இச்சித்து, அர்த்த, காம, மோக்ஷங் (பொருள், இன்பம், வீடு) களைத் தன்னுள்ளடக்கியதும் இம்மைக்கும் மறுமைக்கும் காரணமானதுமான தர்ம (அற)த்தை கால, தேச, வர்த்தமானங் (இடம், ஏவல், பொருள்) களுக்கிணங்க தன் தன் சக்திக்கியன்றவாறு செய்து வருவது மறுக்கமுடியாததன்றோ!

இந்த தர்ம (அற) மானது, கால தேச வர்த்தமானங் (இடம், ஏவல், பொருள்)களின் பேதத்தினால் அதிகமாகச் செய்வது குறைந்த பலனைக்கொடுப்பதும், குறைவாகச் செய்வது அதிகமான பலனைக் கொடுப்பதும் தெரிந்த விஷயமேயாகும். உதாரணமாக பசியில்லாதவனுக்கு அன்னமூட்டுவிப்பதைவிட பசியினால் களைத்திருப்பவனுக்கு அமுது படைப்பது சிறந்த தர்மமல்லவா? அதிலும் எவ்விடத்தும் யாசித்தும் கிட்டாமல் பட்டினியாய்ப் பரிதவிக்கும் ஏழைகளுக்கு அவர்களது பசிப்பிணியையகற்றுவது உத்தமமென்பது சொல்லாமலே விளங்கும்.

நிற்க, இக்காசியம்பதியானது, புண்ணியக்ஷேத்திரங்களுள் தலைமை வகித்ததும், நமது ஹிந்து நூல்களால் பூலோக கைலாயமெனப் புகழப்பட்டதும், பாபத்தைத் தீர்க்கும் பரிசுத்தமான கெங்காநதி யுள்ளதும், எல்லா தேவதைகளுக்கும் உறைவிடமும், ஒவ்வொருவரும் தரிசித்துச் சிறிது காலமாவது வதியவேண்டுமென்று நமது புராணங்கள் முதலிய நூல்களினால் பன்முறை இடித்திடித்துப் பகலப்பட்டதுமாகும்.

இவ்விடத்தில் செய்யும் சிறு தர்மமும், ஒன்று நூறு கோடியாகப் பெருகி இம்மைக்கும் மறுமைக்கும் காரணமாகிறதென்பது நமது மறை நூல்களிலிருந்தும் நமது முன்னோர்களின் செய்கைகளிலிருந்தும் தெற்றெனவிளங்குகிறது.

இக்காசியில் அனேகர் பலவிதமான தர்மங்களை ஏற்படுத்தியிருப்பதில் சிற்சில தர்மங்கள் செவ்வனேயும் சிற்சில தர்மங்கள் பெயரளவிலும் நடந்து வருகின்றனவென்பதும், அவ்விதம் ஏற்பட்ட அன்னதானதர்மங்களில் ஒன்றிலாவது ஏகாதசியன்று அன்னதானம் வழங்குவதில்லையென்பதும் இவ்விடம் வந்துபோன எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

இவ்விடத்தில் காசிவாஸத்தைக் கருதி அன்னதானங்களே கதியென்று நம்பி காலத்தைக் கழிக்கும் கிழவர்களும், கூன், குருடு முதலான அங்கஹீனர்களும் ஏழைகளும் ஏகாதசியன்று தங்கள் தங்கள் பசிப்பிணி தீர்க்க வகையறியாமலும், வழியில்லாமலும் பரிதவிப்பது வருந்தத்தக்கது.

இவ்விதக்குறையை நீக்கும் பொருட்டு இந்த ஸமாஜம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, பிரதி ஏகாதசியிலும் நபர் ஒன்றுக்கு ஆறு தம்பிடிக்கு சத்துமா (ஒருவிதமா)வும் இரண்டு தம்பிடிக்கு வெல்லமும் ஆக எட்டு தம்பிடி வீதம் ஒவ்வொரு ஆஸ்திகரிடமும் யாசித்துக்கேட்டு வாங்கிச் சேரும் தொகையை இந்த ஸமாஜத்தின் மூலம் பசித்திருப்பவர்களுக்கும் பிரதிஏகாதசியிலும் வினியோகம் செய்துவருகிறது. இதின்படி ஒருவருஷத்தில் ஏற்படும் 24 ஏகாதசிகளுக்கு ஒரு அகதிக்குப் பசிப்பிணியாற்ற ஒரு ரூபாய் தேவைப் படுகிறது. பலதுளி பெருவெள்ளமாவது போல் ஒவ்வொருவரும் இச்சிறு தர்மத்தைக் கைக்கொண்டு வருடம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் கொடுப்பதுமூலம் இதைச் செவ்வனேநடந்து வரச்செய்து இக் காசியம்பதியில் அன்னதானம் செய்தபலனை அடையும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

இந்த தர்மத்தை எல்லாரும் செய்யவேண்டி ஒவ்வொரு வரிடத்திலும் ஒவ்வொருஏகாதசிக்கு எட்டு தம்பிடிக்குமேல் எதிர் பார்க்கவில்லையானதால் இரக்கமுள்ளவர்கள் தங்கள் குடும்பத் தவர்கள் மூலமாயும் தங்களைச் சேர்ந்தவர்கள் மூலமாயும் தனித் தனி செய்துவரும்படி ஏற்படுத்திக் கொடுக்கும்படி தெரியப்படுத் திக்கொள்ளுகிறது.

தற்காலத்தில் நாகரீகமான வழிகளில்பிறரைத்திருப்திசெய்ய வேண்டியும், எதிர் பாராமலும், தெரிந்தும் தடுக்க முடியாமலும், எவ்வளவோ சிலவுகள் பிரதிதினமும் ஏற்பட்டுவருவதில் புண்ணிய க்ஷேத்திரமாகிய இக்காசியில் வசிக்கும் ஏழைகளின் பசியைத் தீர்க்க ஒரு மாதத்துக்கு பதினாறு தம்பிடி வீதம் தர்மவிஷயத்தில் மனப்பூர்ணமாகச் சிலவு செய்வது சாதாரணமேயாகும்.

பணம் அனுப்புகிறவர்கள் கீழேகண்ட விலாசத்துக்கு அனுப்பக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

கல்லிடைக்குரிச்சி, கிருஷ்ணவாத்தியார்.
காரியதரிசி.

ஸ்ரீ அன்னபூரண கெங்கா ஸமாஜம்,
ராஜா ஹரிச்சந்திர ரோட்,
பனாரிஸ்.

மனுஸ்மிருதி அத்தியாயம். 2

சில வசனங்கள்.

1. எப்பொழுதும் சிஷ்யன் வலதுகையை உத்தரீயத்துக்கு வெளியில் வைத்துக்கொண்டும் அவையடக்கத்தோடும் சரீரத்தை நன்ருய் மூடிக்கொண்டும் குருவின் உத்தரவின்பேரில் (உட்கார் என்று அவர் சொல்லும்பொழுது) அவருக்கு முன்ஞலுட்கார வேண்டும்.

2. குருவுக்கெதிரில் குறைந்த உணவு, உடை, ஆபரணம் இவைகளேயுடையவஞயிருக்கவேண்டும். காலேயில் அவருக்கு முந்தி படுக்கையைவிட்டு எழுந்திருக்கவேண்டும். இரவிலவருக்குப் பிந்தி படுக்கப்போகவேண்டும்.

3. வாதமோ, உத்தரவாதமோ, எதையும் குருவோடு படுக்கையிலிருந்தோ, உட்கார்ந்துகொண்டோ, உணவிலிருந்துகொண்டோ, நின்றுகொண்டோ, முகத்தைத் திருப்பிக்கொண்டோ, செய்யக்கூடாது.

4. குரு உட்கார்ந்து கட்டளேயிட்டால் சிஷ்யன் நின்று கேட்கவேண்டும். அவர் நின்றுசொன்ஞல் அவரை நோக்கிச் சென்று கேட்கவேண்டும். அவர் வந்து சொன்ஞல் எதிர்கொண்டு போய் கேட்கவேண்டும். அவர் ஓடிச்சொன்ஞல் அவர்பின் ஓடி மறுமொழி கூறவேண்டும்.

5. குரு முகம் திருப்பிப் பேசிஞல் அவருக்கு முன்னிருந்து உத்தரம் சொல்லவேண்டும். எட்டியிருந்து பேசிஞல் சமீபம் போய் மறுமொழி கூறவேண்டும். படுக்கையிலிருந்து பேசிஞல் தலேகுனிந்து கேட்க்கவேண்டும். ஸமீபத்திலிருந்து பேசும்பொழுதும் மிக அவையடக்கத்தோடு எதிருரைக்கவேண்டும்.

6. குருவின் ஆஸநம், படுக்கை இவைகளேவிட சிஷ்யனுடையது தாழ்மையானதாயிருக்கவேண்டும். குருவின் பார்வையில் தன்னிஷ்டப்படி கால் கைகளே நீட்டிக்கொண்டு சிஷ்யன் உட்காரக்கூடாது.

7. குருவில்லாமை ஸமயங்கூட "ஆசார்யாள்" முதலிய கௌரவ பட்டமன்னியில் அவர் பெயரைச் சொல்லக்கூடாது. பரிஹாஸபுத்தியோடு அவருடைய நடை பேச்சு பாவனை முதலிய வைகளை அனுஸரிக்கக்கூடாது.

8. குருவினிடத்திலிருக்கும் தோஷமோ, எதைப்பற்றிப் பேச்சு நடந்தாலும், சிஷ்யன் காதைப் பொத்திக்கொள்ளவேண்டும். அல்லது அந்தவிடம்விட்டு வேறுவிடம் செல்லவேண்டும்.

9, குருவின் தோஷத்தைச் சொல்வதால் சிஷ்யன் கழுதையாய்ப் பிறப்பான். அவரை நிந்தித்தால் நாயாய்ப் பிறப்பான். அவர் சொத்தை அனுபவித்தால் புழுவாய்ப் பிறப்பான். அவரிடம் மாத்ஸர்யப்பட்டால் பூச்சியாய்ப் பிறப்பான்.

10. சிஷ்யன் தூரத்திலிருந்துகொண்டு வேறொருவரால் குருவைப் பூஜிக்கக்கூடாது. (தனக்கு சக்திகுக்குறைவிருந்தால் செய்யலாம்.) கோபங்கொண்டுமுபசரிக்கக்கூடாது. அவர் பத்னியுடனிருக்கும்போதும் கிட்டப் போகக்கூடாது. தான் வண்டியிலோ, உயர்ந்த ஆஸனத்திலோ இருந்தால் கீழிறங்கி குருவைப் பூஜிக்கவேண்டும்.

R ஸ்வாமிநாத அய்யர்.

நாஸ்திகாஸ்திக ஸம்வாதம்.

நாஸ்திகன்:—வினு. ஓ! ஆஸ்திகரே? நமது ஹிந்துமதம் அடியோடு கெட்டுப்போய்விட்டது என்று எப்போதும் புலம்பிக்கொண்டிருக்கிறீரே? உமது மதத்திற்கு என்ன அவ்வளவு கௌரவம். அழியுந்தன்மை வாய்ந்த மதத்தை "ஸநாதநம்" என்றெவ்வாறு புகழ்வது. மதம் ஸநாதனமாயிருந்தால் ஏனிப்படியெல்லாம் அதற்கு அழிவு உண்டாயிருக்கிறது? ஆகையால் மூடக் கொள்கையடங்கிய ஹிந்துமதத்தைப்பற்றி அடிக்கடி புலம்புவது மூடத்தனம். காலத்தையனுஸரித்து யுக்தானுஸாரமாக மதக் கொள்கைகளை மாற்றிக்கொண்டு ஸந்தோஷமாய் வாழலாகாதோ?

ஆஸ்திகர்:—ஓ! நவநாகரிகப் பிரியரே! எங்களுடைய அழுகையால் தங்களைப்போன்றவர்களுக்கு ஸந்தோஷம் உண்டாகுமல்லவா? அதற்காகத்தான் எங்கள் புலம்பல். இது இருக்கட்டும். ஹிந்து மதத்தில் என்ன மூடக்கொள்கையடங்கியிருக்கின்றது. மூடக் கொள்கையடங்காத மதமெது? கொஞ்சம் சொல்லவேண்டும்.

நா:—ஹிந்துமதத்தில் தற்காலத்தியவர்களின் யுக்திவாதத்திற்குப் பொருந்தாத பல ஆசாரங்களில்லையா? இவ்வளவு மூடக்கொள் கைகள் மூட்டை மூட்டையாய் மற்ற மதங்களிலில்லையே.

ஆ:—ஹிந்துமதாசாரானுஷ்டானங்களெல்லாம் சாஸ்திரீயமாகை யால் அவை மூடக்கொள்கைகளாகா. மத விஷயத்தில் யுக்தி வாதம் பேசுவதுதான் மூடத்தனமாகும்

सर्वारंभा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ॥

என்றபடி எல்லா தேசத்திலும் மூடப் பிடிவாதமில்லாத மதம் காண்பதரிது.

நா:—ஓய்! சாஸ்திரங்களை மதத்திற்குப் பிரமாணமாக ஒப்புக் கொள்வது கூடாது. ஹிந்துமதத்தில் சாஸ்திரமென்பது ஒரு விதமாயில்லை. அனேக சாஸ்திரங்களால் மதம் ஒரேவிதமாக எப்படி போதிக்கப்படலாம். இப்படிப்பட்ட சாஸ்திரங்களால் புத்திவியாமோஹந்தான் உண்டுபண்ணப்படுகிகின்றது. சாஸ் திரமும் யுக்திமூலமேதான். நம் முன்னோர்கள் யுக்தி ஸ்வானுபவ மூலமாகத் தனக்கேற்பட்டுள்ள தத்துவங்களைச்சேர்த்து எழுதி சாஸ்திரமென்று பெயரிட்டுவிட்டார்கள். ஆகவே சாஸ்திரத் திற்கும் யுக்திவாதந்தான் மூலகாரணமாதலால் யுக்தி விரோதம் உள்ள சாஸ்திரங்களை ஒருபோதும் நாம் ஆதரிக்கக்கூடாது.

ஆ:—சாஸ்திரங்களை இவ்விதம் தீர்மானிப்பதற்குப் பிரமாணம் தங்களுடைய யுக்திவாதந்தானே. வேறுப்பிரமாணமுண்டோ? தங்களுக்கு சாஸ்திரங்களெல்லாம் மோஹமென்று தோன்று வதுபோல் எங்களுக்கு யுக்திவாதமும் மோஹமென்று புலப்டு கின்றது.

நா:—ஆனால் மதவிஷயத்தில் யுக்திவாதத்தைச் சிறிதும் தாங்கள் ஆதரிப்பதில்லையா?

ஆ:—மதவிஷயத்தில் சாஸ்திரந்தான் முக்கியப் பிரமாணம். அதற் கனுகூலமாகவுள்ள யுக்திவாதத்தையும் அப் பிரதானமாக ஒப்பு வதுண்டு.

நா:—அதுபோலவே நாங்களும் தர்க்கத்தை முக்கியப் பிரமாண மென்றும், அதையனுஸரித்த சாஸ்திரங்களை அமுக்கியப் பிர மாணமென்றும் சொல்லிவிடுகிறோம். ஆகவே சாஸ்திரந்தான் முக்கியமென்பது போய்விட்டது.

ஆ:—போகவில்லை, தர்க்கவாதம் முக்கியப் பிரமாணமாகாது. ஏனெனின் தர்க்கம் பண்ணுவதற்குப் பிரத்தியக்ஷானுபவம் முந்தியே அவச்யமில்லையா? ஆகவே தர்க்கம் பிரமாணாந்தரத்தை அபேக்ஷிப்பதால் முக்கியமன்று. வேறொருப் பிரமாணத்தை அபேக்ஷிக்காதப் பிரமாணந்தான் முககியமாகும். சாஸ்திரமோ இவ்விதமன்று. இதன் பிராமாண்ய ஸித்தியின் பொருட்டு தர்க்கம் முதலிய பிரமாணாந்தரங்களை யபேக்ஷிப்பதில்லை. ஆனால் தர்க்கத்தை சாஸ்திரங்களின் தாத்பர்யம்,பலாபலம், இவைகளை நிர்ணயம்செய்துகொள்வதில் கொஞ்சம் உபயோகப்படுத்திக் கொள்வதுண்டு. இதன்றி சாஸ்திரங்களின் பிரமாண்யம் நிலைப் பதற்காக யுக்திவாதத்தை எக்காலத்திலுமெதிர்பார்ப்பதில்லை. எதிர்பார்த்தால் அது சாஸ்திரமாகாது. ஆகவே சாஸ்திரந்தான் முக்கியப் பிரமாணம்.

தவிர யுக்தியென்பது ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக உண்டு. சாஸ்திரமென்பதோ யாவருக்கும் ஒன்றேயாகும். சாஸ்திரமும் அனேகமென்றால் யுக்தியும் அனேகம். சாஸ்திர மும் அனேகம். இவ்விரண்டிற்கும் பேதமில்லாமற்போய்விடும்.

அன்றியும் சாஸ்திரத்தை விட்டு தர்க்கத்தை முக்கியப் பிர மாணமாக வொப்புக்கொள்வதால் பிரயோஜனமென்ன?

நா:—சாஸ்திரத்தால் என்னபிரயோஜனமேற்படுகின்றதோ? அது தான் தர்க்கத்தாலும்.

ஆ:—சாஸ்திரத்தால் இஹபரசுகமுண்டு. மோக்ஷமுண்டு.

நா:—இது தர்க்கத்தாலுமேற்படலாம்.

(தொடரும்.)

—— V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

ஸ்ரீ:

|| श्रीकृष्णाय परस्मैब्रह्मणे नमः ||

*ஸ்ரீ பகவத்கீதையும், வர்ணாச்ரம தர்மமும்.

நமது புண்யபூமியாகிய இந்தபாரததேசத்தில் மஹாமஹிமையுடன் விளங்கிவருகிற வைதிகமதக் கிரந்தங்கள் பலவற்றுள் கீதையொன்றும் மிகச் சிறந்ததாகும்.

குருக்ஷேத்ர யுத்தரங்கத்தில் கூடிய எதிரிகளைப்பார்த்த பார்த்தனுக்குத் தகாத ஸமயத்தில் தோன்றிய ஸ்நேஹ காருண்யாதிகளால் தர்மாதர்ம விஷயத்தில் மிகுந்த மனக்குழப்பம் உண்டாகியது. இதைச் சமிப்பித்து அவனை யுத்தம்செய்யத் தூண்டுவதை வியாஜமாகக்கொண்டு இந்த சாஸ்திரம் அவதரித்ததென்று சொன்னாலும், இதில் உபநிஷத் பிர்மஸூத்ரம் முதலானவைகளின் ஸித்தாந்தத்தையனுஸரித்து ஸகல கல்யாணபரிபூர்ணனாகிய ஸ்ரீமந் நாராயணன் பரபிர்ம்மமென்றும், அவனை எந்த அதிகாரியும் ஸ்வதர்மம் என்கிற வர்ணாச்ரமதர்மானுஷ்டானாதிகளாலே அடைய முடியுமென்பதும் வெகு தெளிவான வாக்யங்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே விபரீதார்த்தம் செய்தாலன்றி கீதையின் வாக்யசைலியாலும், தாத்பர்யத்தாலும் வேறுபடுத்த முடியாத இந்த ஸித்தாந்தத்தையே ஸ்ரீ சங்கர ஸ்ரீராமானுஜர் முதலிய வைதிகமதானுஸாரிகளான பாஷ்யகாரர்களும் தங்களது கிரந்தங்களில் பிரபஞ்சித்தார்கள். ஆகையால் தற்போது நமது தேசத்தில் பற்பல மதஸ்தர்களும் வெவ்வேறான மனோபாவத்துடன் கீதையை ஆதரித்தபோதிலுமிது வைதிகமதமொன்றையே வற்புறுத்தவந்ததென்பதும், மற்றோரைவிட வைதிக மதத்தினருக்கே இது நெருங்கியதென்பதும், எவராலும் இது மறுக்கமுடியாதது. ஆயினும் கொடிய கலியின் கூத்தினால் நமது தேசத்தில் மிகவும் உத்கிருஷ்டமாக விளங்கிவருவதும், நமது நாகரிகத்திற்கே வேர்போன்றதுமான வர்ணாச்ரம வியவஸ்தைகளைத் தேச க்ஷேம

* இது அக்னிஹோத்திரம். கோபாலதேசிகாசார்யரால் செய்யப்பட்ட உபந்நியாஸ ஸாரம்.

மென்கிற தப்புவியாஜம்கொண்டு அழித்துவிடக் கங்கணம் கட்டியுள்ள பல அவைதிகமதங்களும் பசுத்தோல் போற்றிய புலிபோல் வைதிக வேஷம்பூண்டு வேதவிருத்த மதப்பிரசாரம் செய்யும் "தியாஸபி" 'ஆர்ய ஸமாஜம்' போன்ற மதங்களும் இந்த பகவத் கீதையையே பிரமாணமாகக் காட்டி ஜாதிவியவஸ்தை அடியோடு வேண்டுவதில்லையென்றும். அல்லது அது குண கர்மங்களுக்கு ஏற்றவாறு நம்மால் கற்பிக்கப்படக்கூடியதென்றும் சொல்லி தர்மங்களைக் குலைத்துவருவதைப் பார்த்துவருகிறோம். பகவத் கீதையின் காலம், அதை உபதேசித்த பகவான், அதிலடங்கிய தத்வம் முதலிய விஷயங்களைப்பற்றி இந்த நாஸ்திக வாதிகள் வேண்டுமென்றே குயுக்தியாலும், ஹடாத்காரத்தினாலும் பற்பல விபரீத விமர்சங்களை வெளியிட்டிருப்பதுடன் முக்கியமாக ஜாதி குலாசார விஷயமாக இவர்கள் பிரசாரம்செய்துவருவது ஸஹிக்கக்கூடாத நிலைமைக்கு வந்துவிட்டது. பத்திரிகைகளிலும் பிரஸங்க மேடைகளிலும் தலைவிரித்தாடுகிற இந்த துர்வாதத்தினால் துர்பல மதிகளான நம்மவர் பலர் வர்ணாச்ரம தர்மங்களுக்குக் கீதையில் பிரமாணமில்லையென்று நினைக்க இடமுண்டாகிவிட்டது. ஆகவே இச் சிறிய வியாஸத்தில் முக்கியமான சில விஷயங்களைமட்டும் ஆராய்வது ஆவச்யகமாயிருக்கிறது.

பகவத்கீதையின் ஒவ்வொரு அத்யாயத்திலும் வர்ணாச்ரம தர்மானுஷ்டானமானது ஸம்சயவிபர்யயாதிகளுக்கு இடமில்லாதபடி தெளிவாகப் போதிக்கப்பட்டுவருவதை ஸம்ஸ்கிருத பாஷாபரிசயமுள்ள எந்த மனிதனும் ஸுலபமாக அறிந்துகொள்ளமுடியும். ஆரம்பத்தில் அர்ஜுனன் பந்து ஸ்நேஹாதிகளால் மனக் கிலேசமடைந்தானாகிலும் அவன் யுத்தம்செய்ய மறுத்ததற்கு முக்கிய காரணமென்னவென்பதைக் கவனிக்கவேணும். பெரிய யுத்தத்தில் கோடிக்கணக்கான மனிதர்கள் மடிவதன்மூலமாகப் பல குடும்பங்கள் குலைந்துபோகவும், அதடியாக அந்தந்த ஜாதிகுல தர்மங்களும் கெட்டு ஸ்திரீகள் சீரழிய நேரிடுமென்றும், ஸ்திரீகள் கெடுவதால் ஜாதிக் கலப்பு என்கிற பெரியதோஷம் உலகில் பரவி, பரிசுத்த ஸந்ததிகளால் கொடுக்கப்படவேண்டிய பிண்டம் திலதர்ப்பணம் முதலிய சிராத்த கர்மங்களில்லாமல் பிதுரு தேவதைகள் வீழ்ச்சியடைய நேரிடுமென்றும், இவ்வாறு ஜாதி குல தர்மங்களற்றிருப்பவர்களுக்கு நரகத்திலே நியதவாஸம் கிட்டுமென்றும் அர்ஜுனன்

பயந்ததாகச் சொல்லப்படுகிறது. (1-40-44.) இந்தவிடத்தில் காணப்படுகிற ஜாதிதர்மம், குலதர்மம், ஜாதிக் கலப்பு, பித்ருதேவதைகள், பிண்டம், உதகம், நாகம் முதலிய பதங்கள் வைதிக மதத்திலன்றி வேறு எந்த மதத்திலாவது வழங்கப்படுகின்றனவா வென்பதை யோஜிக்கவேணும். தவிரவும் சக்ரவர்த்தியாகவிருந்து தர்மநெறி தவருது பிரஜா பரிபாலனம் செய்துவந்த அர்ஜுனனுக்கு மஹா யுத்தத்தால் ஜாதிகுல தர்மங்கள் அழிந்துவிடக்கூடுமென்ற பயமுண்டானதைப் பார்த்தால் ஜாதி நியமம் கிடையாதென்கிற வாதமும், அல்லது அது குணகர்மங்களையனுஸரித்ததென்கிற வாதமும் அடிபட்டுப்போகிறதல்லவா? ஜாதி வியவஸ்தையானது குண கர்மங்களையனுஸரித்து காலத்திற்கேற்றவாறு நம்மால் கற்பிக்கக்கூடியதாயிருந்தால் ஜாதிக்கலப்பு ஏற்படுமென்று அர்ஜுனன் பயப்பட நியாயமில்லையே. யுத்தத்திற்குப் பிறகு மிருந்திருக்கிற ஜனங்களிடத்தில் அவனவனது குண கர்மங்களையிட்டுப் புதிதாக ஜாதி நியமங்களை அவனே உண்டுபண்ணிவிடலாமன்றோ? இம்மாதிரி புதிதாக ஜாதிவியவஸ்தை செய்வதற்கு அர்ஜுனனுக்குச் சக்தி கிடையாதா? அப்படியிருந்தும் அவன் ஜாதிக் கலப்பு ஏற்படுமென்று பயப்படக் காரணமென்ன? ஆகையால் ஜாதிவிபாகமானது பிறப்பிலேயே பகவானுல்தான் உண்டுபண்ணக்கூடியதென்றும், அதை ஒரே சரீரத்தில் எவ்விதத்தாலும் மாற்றிவிடமுடியாதென்றும் சாஸ்திர நியமம் இருப்பதாலல்லவோ ஜாதி கலப்பு தோஷம் தன்னுல் தவிர்க்கமுடியாததென்று அவன் பயப்படநேர்ந்தது. ஆகையால் கீதையின் ஆரம்பத்திலேயே வர்ணாச்ரம விரோதிகளான சீர்திருத்தக்காரர்களுக்குத் தகுந்த பதில் அளிக்கப்பட்டிருப்பதை அவர்கள்ஸமாளிக்கமுடியாதென்பது நிச்சயம்.

ஜாதியானது பிறப்பினுலேயே ஏற்படுகிறதென்பது சுருதி ஸ்மிருதி முதலிய பிரமாணங்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதை கீதையிலும் பகவான் பலவிடங்களில் ஸ்திரப்படுத்தியிருக்கிருர், நான்காவது அத்யாயத்தில் பகவான் "பிராம்ஹண, க்ஷத்திரிய வைச்ய, சூத்ரனென்கிற நான்கு வர்ணமும் அததற்கேற்ற குண கர்மங்களுடன் என்னுல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது" (4—13) என்று சொல்லுகிருர். ஆனல் இங்கு சீர்திருத்தக்காரர்கள் 'குண கர்ம விபாகச:'' என்கிற வாக்கியத்திற்குத் தலைகீழான அர்த்தம்

செய்துவருகிறார்கள். சுலோகத்தின் பொருளை நன்கு கவனித்தால் இவர்களது மனோரதத்திற்கு இங்கு இடமில்லையென்பது புலனாகும். இது நான்குவர்ணங்களை ஸிருஷ்டிசெய்தவர் யாரென்பதை விளக்கவந்ததேயன்றி இன்ன குணமுள்ளவன் பிராம்மணன், இன்ன குணமுள்ளவன் க்ஷத்திரியனென்று பிராம்ஹணாதிகளுக்கு லக்ஷணம் சொல்லவந்ததன்று. தவிரவும் இங்கு ''ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது'' என்கிற பதம் பிரயோகப்பட்டிருக்கிறது. குணகர்மங்களை யனுஸரித்து ஜாதி தானாகவே உண்டாகக்கூடியதாயிருந்தால் இதில் பகவான் ஸிருஷ்டிசெய்யவேண்டியதென்ன இருக்கிறது? ''குணகர்ம விபாகச:'' என்கிறதின் அர்த்தத்தை பகவானே 18-வது அத்யாயத்தில் நன்கு விவரித்திருக்கிறார். அங்கு ''பிராம்ஹணனுக்கு சமம், தமம், சௌசம், ஞானம், முதலிய கர்மங்களென்றும், க்ஷத்திரியனுக்கு சௌர்யம், யுத்தம், பிரஜா ரக்ஷணம் முதலியவை கர்மங்களென்றும், வைச்யனுக்கு கிருஷி, கோரக்ஷணம், வியாபாரம் இவைகள் கர்மங்களென்றும், சூத்ரனுக்கு ஊழியம் கர்மமென்றும் (18—41—44) விரிவாகச் சொல்லப்படுகிறது. இங்கு பிராம்ஹணாதி ஜாதிகளை உத்தேசித்து ஜாதி விதிக்கப்படவில்லையென்பது வெகுதெளிவாக இருக்கிறது. இப்படிக் கீதை தெளிவாகத் தெரிவிப்பதாலும், சுருதிஸ்மிருதி பிரமாணங்கள் இதற்கு மூலமாயிருப்பதாலுமே ஸ்ரீசங்கர ராமாநுஜாதி பாஷ்யகாரர்களும் ஜாதி, குணகர்மானுஸாரியல்லவென்பதை நிர்ணயித்திருக்கிருக்கிறார்கள்.

மேற்சொல்லிய கீதா வசனங்களால் ஜாதியானது எப்படி நியதமோ, அதுபோல அந்தந்த ஜாதி தர்மங்களும் நியதங்கள் என்று நிச்சயமாகிறது. ஜாதிதர்மமென்பதில் பரலோக ஸாதகமாகச் சாஸ்திரங்களில்விதிக்கப்பட்டவர்ணாச்ரமதர்மங்களும், இஹலோகத்தில் ஜீவனத்திற்காகச்செய்யும்படி விதிக்கப்பட்ட தர்மங்களும் அடங்கியிருப்பதாக ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீதேசிகாதிகளுடைய ஸித்தாந்தமாகும். அதாவது இவ்விரண்டும் ஒன்றானதென்பதே தாத்பர்யமாகிறது. பிராம்ஹணாதிகளுக்கு ஜீவனார்த்தமாகச் செய்ய வேண்டிய தர்மங்களும் வர்ணாச்ரம தர்மங்களில் சேர்ந்ததாகவே பகவானால் உபதேசிக்கப்படுகிறது.

(தொடரும்.)

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

சிசுபாலன்.

1. இவன் சேதிராஜனது புதல்வன். இவன் தாய் யாதவ வம்சத்தைச் சார்ந்தவள். வஸுதேவனது ஸஹோதரி. சிசுபாலன் பிறந்தவுடன் கழுதையைப்போல் கத்தினான். இவனுக்கு மூன்று கண்களும் நாலு கைகளுமிருந்தன. இதைக்கண்டு இவன் பெற்றோர் பயந்தனர். இவனைக் கொல்லவும் ஆரம்பித்தனர்.

2. உடனே ஆகாயத்திலிருந்து ஓர் சப்தம் கிளம்பியது. இவனைக் கொல்லாதே. இவன் ஜயவிஜயர் எனும் த்வாரபாலகரில் ஒருவன். ஹிரண்யாக்ஷனாகவும் ராவணனாகவும் இவன் முன் ஜன்மமெடுத்தான். இவனைக் கொல்பவன் பூமியில் பிறந்திருக்கிறான்.

3, எவனைத் தொட்டவுடன் இவன் மூன்றாவதுகண் மறைகிறதோ, அதிகமான இரண்டு கைகள் கீழே விழுகின்றனவோ, அவனே சிசுபாலனைக் கொல்பவன் என்றது. அன்றுமுதல் இவன்தாய்யார் வந்தாலும்இவனை அவர்மடியில்விட்டுப்பார்ப்பது வழக்கம். எவர் மடியிலிருக்கும்போதும் இவன் மூன்றாவது கண்ணும் அதிகக்கைகயு அகலவில்லை,

4. தற்செயலாக கிருஷ்ணனும் பலராமனுமங்குவந்தனர். கிருஷ்ணன்மடியில் குழந்தையைத் தாய் விட்டாள். உடனே அவைகள் அகன்றன. அவன் தாய் அதைக்கண்டு தண்ணீர் விட்டாள். கிருஷ்ணன் ஏனழுகிறாய் என்று கேட்டார். பந்துவே என் பிள்ளைக்குச் சத்ருவானாயே! என்றாள்.

5. அத்தையிடம் அன்புகொண்டகிருஷ்ணன் அழாதே! உனக்கு வேண்டியவரத்தைக்கேள் என்றான். அவன்என் புத்ரன் குற்றத்தை நீ மன்னிக்கவேண்டுமென்றாள். பந்துப்ரீதியினால் நூறுகுற்றத்தைப் பொறுப்பதாகக் கூறினார். சிசுபாலன் பெரியவனாகி பகவானுக்குப் பல குற்றங்களைச்செய்தான்.

6. யாதவப்பெண்களைக் கெடுத்தான். வஸுதேவர் விரும்பிய பெண்ணைத் தூக்கிச்சென்றான். கிருஷ்ணனது பந்துக்களில்

பலரைக் கொன்றான். பகவான் இவ்வளவையும் பொறுத்தார். ஏன்? சொன்னசொல்லை ரக்ஷிக்கவேண்டுமல்லவா? தர்ம ராஜா ஓர் ராஜஸூயயாகம்செய்தார்.

7. அதற்கு சிசுபாலனும் கிருஷ்ணனும் மற்றவரும் வந்திருந்தனர். யாகத்தில் ஸோமரஸம் இறக்குவதற்குமுன் ஓர் உத்தமரைப் பூஜிப்பது வழக்கம். எல்லோரும் நிறைந்த அச்சபையில் யாரைப் பூஜிப்பது என்ற ஸந்தேஹம் வந்தது. ஸஹதேவன் வந்தவரைப் பூஜிக்கும் வேலையில் அமர்த்தப்பட்டிருந்தான்.

8. அவன் சாஸ்திரங்களை அறிந்தவன். அவன் கிருஷ்ணனுக்கே முதல்பூஜை செய்யவேண்டும் என்றான். அதைப்பீஷ்மர் ஆமோதித்தார். பலரும் ஆதரித்தனர். தர்மர் கிருஷ்ணனுக்குப் பூஜை செய்துவிட்டார். இதைக்கண்டு சிசுபாலனுக்குக் கோபம் உண்டானது, வாயில்வந்தபடி பகவானை நிந்தித்தான்.

9. பீஷ்மரையும் தர்மரையும் அவமதித்தான். பீஷ்மர் விஸ்தாரமாக கிருஷ்ணனது சரிதத்தை வர்ணித்தார். அதைக் கேட்டும் அடங்காக் கோபங்கொண்டான். சில ராஜாக்களை ஸஹாயமாகக்கொண்டான். ஸஹாதேவன் பகவந் நிந்தை செய்வோரைப்பார்த்து தனது காலைத்தூக்கினான்.

10. சண்டை முற்றிற்று. பகவானும் போருக்கு ஸன்னத்தமானார். சிசுபாலனது ஸேனைகளைக் கொன்றார். அப்போதும் அவனை மன்னித்தார். மிகக் கோபத்துடன் அவனைக் கொல்லவேண்டுமென்று பலரும் வேண்டினர். பகவன் சக்ராயுதத்தால் அவனைக் கொன்றார். அவன் பகவானுடன் ஐக்யமானான். பிறரை நிந்திக்காதே. பந்துக்களிடம் அன்பாயிரு. பிறர் குற்றத்தை மன்னி. நீயும் குற்றம் செய்யாதே.

வே. ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

பெரிய நன்கொடை. 15உ அமரிக்காதேசத்து பாதிரி ஒருவர் நம்தேசத்து இதிஹாஸ புராண ஆராய்ச்சிசெய்யும் சங்கத்திற்கு லக்ஷத்துப் பதினேந்தாயிரம் ரூ. நன்கொடை அளித்தார். நமது மத பக்தர்களின் சரிதத்தை ஆங்கிலத்தில் எழுதவும் மற்றும் சில தர்மசாலைகளுக்கும் சிற்சில பாதிரிகள் விசேஷமாக உபகாரம் செய்திருக்கின்றனர், கொடுத்தவர் எந்த எண்ணங்கொண்டு தானம் செய்தாரோ? தானம் பெற்றவர் எங்ஙனமதை விநியோகம்செய்வரோ? நாமறியோம். தானகர்மாவை ச்லாகிப்பது நமது தர்மம்,

ஸ்ரீமுகபடனம் 17உ சென்னை மைலாப்பூரில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்காரசார்யஸ்வாமிகள் விஜயம் செய்வதாக ஸ்ரீமுகபடனம் நடந்தது, ஸ்ரீமான்களான பாலசுப்ரமண்யய்யர் துபாஷ் டி. எஸ், ராமஸ்வாமி அய்யர் டி. எம். கிருஷ்ணஸ்வாமி கார்ப்பரேஷன் தலைவர் டி, ஆர். ராமச்சந்திரய்யர் போன்ற பல ஆஸ்திக சிகாமணிகள் ஸபையை அலங்கரித்தனர். ஸ்ரீ மதாசார்ய படத்திற்கு வாத்யகோஷத்துடன் கிராமப்ரதக்ஷிணம் நடந்தது. வைதிகர்களது வேதபாராயணமும் ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யாது பஜனையும் எல்லோரையுமாகர்ஷித்தது, ஸ்ரீமான் தண்டலம் துபாஷ் ராமஸ்வாமி அய்யாவர்கள் வேதபாராயணத்தருகே நின்று அதை ஆனந்தமாக அனுபவித்துவந்தார். பரம்பரை தார்மிகரிவர்.

கைகூடியது. 18உ திருவாரூர் காமாக்ஷி அம்மனுக்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்து வழக்கப்படி பூஜை ஆரம்பித்து நடப்பதாக அறிகிறோம். உள்ளூர் ஆஸ்திகர் செய்த முயற்சி கைகூடுமென முன் தெரிவித்தோம். அதேபோல் நன்முயற்சிசெய்து நற்காரியத்தை நடத்திவைத்த நல்லாரைப் போற்றுகிறோம். இதேபோல் ஆலய விஷயங்களில் ஆஸ்திகர் சிரத்தைகொண்டால் குறைகள் நீங்கும்.

அன்னதானம். 19உ கூனூர் சத்குரு சங்கத்தார் பெரும் முயற்சிசெய்து எண்ணிறந்த ஏழைகளுக்கு அன்னமளித்தனர்.

இப்பெரும் பணியில் ஈடுபட்டோர் ஸ்வர்க்கத்திலும் மறுபிறப்பிலும் அன்னத்திற்காகக் கஷ்டப்படமாட்டார் என்பது திண்ணம்

லக்ஷதீபம். 26ஆ மத்யார்ஜுந க்ஷேத்ரத்தில் வழக்கமாக வடபாதிமங்கலம் ஜமீன் நடத்திவரும் லக்ஷதீபமும் அபிஷேக பிராமண ஸமாராதனை முதலிய வைபவங்களும் மிக விமர்சையாக நடத்தப்படும். அவியும் ஸமயத்திலிருந்த ஆலயதீபத்தின் எண்ணையைக் குடிக்கவந்த எலி அறியாமல் தீபத்தை தொந்தியதற்கு அவ்வெலிக்கே நற்கதி அளிக்கப்பட்டதெனில் நல்லறிவுடன் நற்காரியம் செய்வோரது அஞ்ஞாந அந்தகாரம் நீங்கி ஞானச்சுடர் உண்டாவது ஸத்யமன்றோ?

மற்றோர் ஸ்ரீமுகம். 19ஆ சென்னை முத்யால்பேட்டை ஸ்ரீ காளஹஸ்தீச்வரர் ஆலயத்தில் ஸ்ரீ ஜகத்குரு வருகையை முன்னிட்டு பகவத்பாத படத்திற்கு ஊர்வலமும அதன்பின் புராண ப்ரவசந ஸபையினர் வேதபாராயணமும் திருப்புகழ் பஜனையும் நடந்தது. ஸ்ரீ மதாசார்ய வைபவத்தைக்குறித்து உபன்யாஸமும் நடந்தது. பக்தர்களது உத்ஸாகமளவிற்கடங்காதது.

கற்பரசியின் தவம். 10ஆ லாகூரில் ஓர் கற்பரசி ஒருமாதமாக அன்ன ஆஹாரமில்லாமல் வெட்ட வெளியில் நின்றுகொண்டே இருந்தவள் கீழேவிழுந்தாள். தன் பதியை இழந்ததால் லோக விஷயத்தில் பற்றுகொள்ளாது அவனையே நினைத்து நின்றநிலையில் ஒருமாதமிருந்தாள். அவளது உறுதியைக்கண்ட ஆஸ்திகர் அவள் களைத்து கீழேவிழும்போது அங்கேயே ஓர் படுக்கையில் அவளைப் படுக்கவிட்டனர், இப்போதும் உணவுகொள்ளாமலிருக்கிறாள். பதி இறந்தபின் தலைமயிரை ஸ்திரீகள் எடுக்காவிடில் புருஷன் நரகத்தில் கஷ்டப்பட்டு தவிப்பானென தர்மநூல் கூறுகிறது, சிகையைக்கூட த்யாகம்பண்ண மநமில்லாப்பெண்கள் இந்த உத்தமியின் சரிதத்தை உற்றுநோக்குக.

வே. ஸோமதேவ சர்மா.